இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்

# இயேசுவை தினம் பார்க்கிறேன்

VOL 24 ISSUE 01 JANUARY-2024 ஆண்டு சந்தா 100/- தனிப்பிரதி 10/-



உங்கள் அனைவருக்கும்
இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் சார்பாக

## இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள் 2024

# ஒருவனும் உனக்கு முன்பாக எதிர்த்து நிற்பதில்லை

இயேசுவை தினம் பார்க்கிறேன் மாதப் பத்திரிக்கை இப்பொழுது Digital முறையில் நம்முடைய இணையதளத்திலும்

WWW.JESUSLIVES.IN


செம்பட்டியில்
இயேசுவின்
பாதத்தில்
ஆசீர்வாத
உபவாச ஜெபம்
ஜனவரி
12
இரண்டாவது
வெள்ளிக்கிழமை
காலை 9:30 மணி
முதல்
2:30 மணி வரை
ஜனவரி
13
இரண்டாவது சனிக்கிழமை
காலை 9:30 மணி முதல்
மதியம் 2:30 மணி வரை
இடம் வானத்தின் வாசல், எழுப்புதல் ஜெப மையம்,
செம்பட்டி, திண்டுக்கல்


மதுரை மாவட்ட அனைத்து திருச்சபைகள் மற்றும்
இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் இணைந்து நடத்தும்
மதுரையில் எழுப்புதல்
உபவாச ஜெபம்
BRO. MOHAN C. LAZARUS
EVG.L.VINCENTRAJ
EVG.KALAVINCENTRAJ
ஜனவரி
20
சனிக்கிழமை
9:30am
to
2:00pm
இடம்
இயேசு அழைக்கிறார் ஜெபகோபுரம், பைபாஸ் ரோடு,
பழங்காநத்தம், PRC Depot அருகில், மதுரை

# ஆசிரியர் மடல்

**ஆ**ண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த புதிய வருஷத்தில் தேவன் நீங்கள் வேண்டிக் கொள்ளுகிறதற்கும், நினைக்கிறதற்கும் மேலாக உங்களை ஆசீர்வதிப்பார்.

**நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் ஒருவனும் உனக்கு முன்பாக எதிர்த்து நிற்பதில்லை யோசுவா 1:5** என்ற வார்த்தையின்படி ஒருவனும் உங்களை மேற்கொள்ளாமலும், ஒருவனும் உங்களை எதிர்த்து நிற்காமலும் அற்புதமாய், ஆச்சரியமாய் நடத்துவாராக. தேவனுடைய கிருபையினாலே இந்த புதிய வருஷத்திலே தேவனுக்காக பெரிய காரியங்களைச் செய்யவும், தேவனுடைய சித்தத்தின்படி அவருடைய ராஜ்யத்திற்காக உழைக்கவும் தேவன் எங்களைப் பயன்படுத்த ஜெபித்துக் கொள்ளுங்கள். கர்த்தருக்கு சித்தமானால் ஜனவரி 1-ஆம் தேதி (2024) செம்பட்டி வானத்தின் வாசல் எழுப்புதல் ஜெபமையத்தில் வைத்து மாலை 3 மணி முதல் 6 மணிவரை **புத்தாண்டு ஆசீர்வாதக் கூட்டமும்**, ஜனவரி 12,13 தேதிகளில் இரண்டாவது வெள்ளிக்கிழமை மற்றும் இரண்டாவது சனிக்கிழமைகளில் **ஆசீர்வாத உபவாச ஜெபமும்** நடைபெறுகிறது. அதைத் தொடர்ந்து ஜனவரி 20- ஆம் தேதி மூன்றாவது சனிக்கிழமை **மதுரை எழுப்புதல் உபவாச ஜெபம்** நடைபெறும், மதுரை உபவாச ஜெபத்திற்கு அண்ணன் மோகன் சி. லாசரஸ் அவர்கள் தேவ செய்தி கொடுக்க வருகிறார்கள். மதுரை பட்டணத்தின் எழுப்புதலுக்காக நாம் அதிகமாக ஜெபிக்க வேண்டும். அருகேயுள்ள பட்டணங்களில் உள்ளவர்கள் இந்த எழுப்புதல் ஜெபத்தில் வந்து கலந்து கொள்ள அன்புடன் அழைக்கிறோம். மேலும் வருகிற பிப்ரவரி மாதம் 1,2,3 ஆகிய தேதிகளில் திருப்பத்தூரில் **71-வது பரிசுத்த உபவாச முகாம்** நடைபெறுகிறது. எல்லா தேவ ஊழியர்களும் இணைந்து ஏறக்குறைய 36 வருஷங்கள் நடத்துகிறோம், எழுப்புதல் வாஞ்சையுள்ள யாவரும் அழைக்கப்படுகிறார்கள். தொடர்ந்து நம்முடைய மீடியா ஊழியத்திற்காகவும், பத்திரிக்கை ஊழியத்திற்காகவும் தவறாமல் ஜெபியுங்கள். நம்முடைய நாட்களில் தேவனுடைய எழுப்புதலை நாம் காண கருத்தாய் ஜெபிக்க வேண்டும். மீண்டும் எங்கள் குடும்பத்தின் சார்பாக புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம். கர்த்தருடைய மாறாத கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக.



*இயேசுவின் பணியில்,*

L. Vincentraj

(சகோ. L. வின்சென்ட்ராஜ்)



# ஒருவனும் உனக்கு முன்பாக எதிர்த்து நிற்பதில்லை

**நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் ஒருவனும் உனக்கு முன்பாக எதிர்த்து நிற்பதில்லை. யோசுவா 1:5**

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் மீண்டும் ஒரு புதிய வருஷத்தில் உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். கடந்து வந்த மாதங்களிலும், சென்று போன வருஷங்களிலும், நம் கூட இருந்து நம்மை நடத்தினவர், இந்த புதிய வருஷத்தில் நம்மை அற்புதமாய் நடத்துவார். ஆண்டவராகிய தேவன் யோசுவாவைப் பார்த்துச் சொன்னார், நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் ஒருவனும் உனக்கு முன்பாக எதிர்த்து நிற்பதில்லை என்றார். ஏன் இதை யோசுவாவுக்கு தேவன் சொல்ல வேண்டும். யோசுவா வாலிபப்பையனாக இருந்த போது மோசேயோடு இருந்தார். அது மட்டுமல்ல நாற்பது நாள் மலையின் மேல் மோசே ஏறும் போது கூட இருந்தார். யாத் 33:11-ல் நூனின் குமாரனாகிய யோசுவா என்னும் அவனுடைய பணிவிடைக்காரனாகிய வாலிபன் ஆசரிப்புக் கூடாரத்தை விட்டு பிரியாதிருந்தான் என்று வாசிக்கிறோம்.மோசேயோடு பல இன்னல்களில், பல மேன்மைகளில் கூட இருந்தவர். அதுமட்டுமல்ல ஜனங்கள் அவருக்கு விரோதமாய் எழும்பின போது அதை எல்லாம் கூட இருந்து பார்த்த மனிதன். இப்பொழுது மோசேயின் காலத்திற்குப் பின்பு இந்த ஜனங்களை கானானுக்குள் கொண்டு போய் சேர்க்க வேண்டும். தேசத்தை பங்கிட்டுக் கொடுக்க வேண்டும். பல யுத்தங்களைப் பண்ண வேண்டும். இப்படிப்பட்ட போராட்டமான நேரத்தில் தான் ஆண்டவராகிய தேவன் அவரைப் பார்த்து சொன்னார் நீ பயப்படாதே, நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் ஒருவனும், ஒரு காரியத்திலும் உன்னை எதிர்த்து நிற்பதில்லை. நான் மோசேயோடு இருந்தது போல உன்னோடும் இருப்பேன் என்றார். ஆம் ஒருவனும் உன்னை எதிர்த்து நிற்பதில்லை, காரணம் யோசுவாவுக்கு ஆண்டவராகிய தேவன் சொன்னார் யோசு 1:8-ல் இந்த நியாயப்பிரமாணப் புஸ்தகம் உன் வாயை விட்டுப் பிரியாதிருப்பதாக, அதை இரவும், பகலும் தியானிப்பாயாக என்றார்.

அந்த வார்த்தையின்படி யோசுவா தேவனுடைய வார்த்தையை தியானித்து, அவருக்குள் தேவனுடைய வார்த்தைகளும், வாக்குத்தத்தங்களும் அவர் இருதயத்தை எப்பவும் நிரப்பிக் கொண்டே இருந்தது. அதனால் அந்த வார்த்தையை, தேவனுடைய வாக்குத்தத்தங்களை எதிர்க்க முடியாது என்பதை அவர் அறிந்திருந்தார். வேதம் சொல்லுகிறது சங் 105:28-ல் அவருடைய வார்த்தைகளை எதிர்ப்பாரில்லை என்று சொல்லப்பட்டுள்ளது. இந்த தேவனுடைய வார்த்தை, ஜீவனுள்ள வார்த்தை யோசுவாவுக்கு இருந்தபடியினால், ஆண்டவராகிய தேவன் அவரைப் பார்த்துச் சொன்னார் ஒருவனும் உன்னை எதிர்ப்பதுமில்லை மேற்கொள்ளுவதுமில்லை என்றார்.



இன்றைக்கு நாம் சந்திக்கின்ற பிரச்சனைகளில், போராட்டங்களில் நமக்குள் தேவை தேவனுடைய வார்த்தை. நம்முடைய இருதயத்திற்குள் தேவனுடைய வார்த்தை இருந்தால் எந்த கவலையோ, எந்த பயமோ நம்மை மேற்க்கொள்ள முடியாது. ஆம் கர்த்தருடைய வார்த்தை யோசுவாவோடு இருந்தது. ஆகவே தேவன் அவரைப் பலப்படுத்தினார். ஒருவனும் உன்னை எதிர்த்து நிற்பதில்லை என்றார். உபா 32:30 அவர்களுடைய கன்மலை அவர்களை விற்காமலும், கர்த்தர் அவர்களை ஒப்புக் கொடாமலும் இருந்தாரானால் ஒருவன் ஆயிரம் பேரைத் துரத்தி, இரண்டு பேர் பதினாயிரம் பேரை ஓட்டுவதெப்படி என்றார் தேவனாகிய கர்த்தர் யோசுவாவோடு இருந்தபடியால் ஆயிரம் வந்தாலும், பதினாயிரம் வந்தாலும் எதுவும் உன்னை அணுகாது, மேற்க்கொள்ளாது என்றார். யோசுவாவுக்கு தேவ வாக்குத்தத்தம் கர்த்தரிடத்திலிருந்து பரிபூரணமாய் வந்தது, ஒருவனும் உன்னை எதிர்த்து நிற்பதில்லை என்றார். இன்றைக்கு இந்த செய்தியை வாசித்துக் கொண்டிருக்கிற என் அன்பு சகோதர, சகோதரிகளே, வருகின்ற நாட்களில் நாம் சந்திக்கப் போகின்ற ஒவ்வொரு காரியங்களிலும், போராட்டங்களிலும், எதிர்ப்புகளிலும் எதிர்மறையான காரியங்களிலும் நாம் பயப்படவோ, கலங்கவோ தேவையில்லை. தேவன் யோசுவாவுக்கு கொடுத்த அதே வாக்குறுதியை நமக்கும் கொடுக்கிறார். ஒருவனும் ஒரு காரியத்திலும் உன்னை எதிர்த்து நிற்பதில்லை என்று சொல்லுகிறார். ஒருவன் மட்டுமல்ல ஆயிரம், பதினாயிரம் பேர் வந்தாலும் உன்னை மேற்க்கொள்ள முடியாது. காரணம் ஒருவராய்ப் பெரிய காரியங்களைச் செய்கிற தேவன் உன்னோடு இருந்து, உன்னை ஆசீர்வதித்து அற்புதமாய் இந்த புதிய வருஷத்தில் நடத்துவார்

ஆகவே இந்த வார்த்தைகளை நம்பி கர்த்தர் எனக்கு சகாயர் மனுஷன் எனக்கு என்ன செய்வான் என்று எபி 13:6-ல் சொல்லப்பட்டுள்ள வார்த்தையின்படி அதினாலே நாம் தைரியம் கொண்டு கர்த்தர் எனக்குச் சகாயர், நான்

பயப்படேன், மனுஷன் எனக்கு என்ன செய்வான். நாம் தைரியம் கொண்டு தேவனைப் பின்பற்றுவோம். தேவன் இந்த புதிய வருஷத்தில் யோசுவாவுக்குச் சொன்னது போல ஒருவனும் உன்னை எதிர்த்து நிற்பதில்லை என்ற வார்த்தையின்படி உங்களை அற்புதமாய், அதிசயமாய் நடத்துவார். இந்த 2024-ல் ஒருவனும் உங்களை எதிர்க்கவோ, மேற்க்கொள்ளவோ முடியாதபடி உங்களை ஆசீர்வதித்து நடத்துவார்.

## ஏன் ஒருவனும் என்றார்

பின்னும் பார்வோன், யோசேப்பை நோக்கி நான் பார்வோன், ஆனாலும் எகிப்து தேசத்திலுள்ளவர்களில் ஒருவனும் உன் உத்தரவில்லாமல் தன் கையையாவது, காலையாவது அசைக்கக்கூடாது என்றான் ஆதி 41:44. இந்த புதிய வருஷத்தில் ஒருவனும் என்ற இந்த பட்டியலில் தேவன் உன்னையும் இணைக்க வேண்டும், சேர்க்க வேண்டும். ஏன் அந்த ஒருவனும் என்கிறார் யோசுவாவுக்கு அப்படித் தான் சொன்னார். சில பேரை சில காரியத்திலும், அவர்களைத் தவிர வேறு எவரும் செய்ய முடியாதபடிக்கு வைத்திருக்கிறார். அதை அவர்கள் தான் செய்ய முடியும். அப்படி உள்ளவர்களில் ஒருவர் தான் யோசேப்பு, கர்த்தர் அவனோடே கூட இருந்தார். ஒரு மனிதனோடு தேவன் இந்த பூமியில் இருந்தால், வாழ்ந்தால் அவன் விலையேறப் பெற்றவன். மதிப்புக்குரியவன். அப்படி ஒருவரில் யோசேப்பு ஒருவர். தேவன் யோசேப்புக்கு அளவிட முடியாத ஞானத்தையும், பரிசுத்த ஆவியையும் கொடுத்திருந்தார். அந்த ஞானத்தின் ஆவியை வைத்து அநேக பிரச்சனைகளுக்கு தீர்வையும், ஆலோசனையும் சொன்னார். குறிப்பாக பார்வோன் சொப்பனம் கண்டு, கனவு கண்டு அதின் அர்த்தம் தெரியாமல், விளங்காமல் தவித்த போது அந்த கனவுக்கு, சொப்பனத்திற்கு அர்த்தம் சொல்ல, தேவன் தேசத்தில் செய்யப் போகின்ற காரியத்தை, தேவ திட்டத்தை அவர்களுக்கு விளக்கிக் காண்பித்தார். இதைக் கண்ட பார்வோன், இவனைப் போல தேவ ஆவியைப் பெற்ற மனிதன் ஒருவன் எனக்கு கிடைக்க கூடுமோ என்று சொல்லி உன்னைப் போல ஞானமுள்ளவன், விவேகமுள்ளவன் ஒருவனுமில்லை என்று சொல்லி எகிப்து தேசத்திற்கு அதிபதியாக உயர்த்தினான்.

ஏனென்றால் அவனுக்கு நிகரானவர் இந்த பூமியில், அந்த வேலைக்கு ஒருவருமில்லை என்று அவனை கனம் பண்ணினான். ஒருவனும் யோசேப்பின் உத்தரவில்லாமல் கையையோ, காலையோ அசைக்ககூடாது என்று சொல்லி அவனை உயர்த்தினான். இந்த 2024-ஆம் ஆண்டில் தேவன் உங்களை அப்படிப்பட்ட ஒருவராகத்தான் ஆசீர்வதித்து உயர்த்தப்



போகிறார், ஞானத்தைத் தரப் போகிறார். இயேசு சொன்னார் லூக்கா 21:15-ல் உங்களை விரோதிக்கிறவர்கள் ஒருவரும் எதிர்பேசவும், எதிர்நிற்கவும் கூடாத வாக்கையும், ஞானத்தையும் நான் உங்களுக்குக் கொடுப்பேன் என்றார். நம்முடைய குடும்பத்தில், வேலையில், தொழிலில் ஊழியப்பாதையில் ஜெபஜீவியத்தில் கர்த்தர் எந்த வருஷத்திலும் இல்லாத ஞானத்தையும், விவேகத்தையும், தேவ ஆவியையும் நமக்கு தேவன் தரப்போகிறார். இதிலே உங்களுக்கு நிகரானவர் ஒருவரும் இல்லை என்கிற அளவுக்கு தேவன் ஒரு ஆசீர்வாதத்தைக் கட்டளையிடப் போகிறார். உங்களைத் தவிர வேறு யாரும், செய்ய

முடியாத காரியங்களை தேவன் உங்களைக் கொண்டு, உங்கள் வேலையில் செய்யப் போகிறார்.. இதைத் தான் சாலொமோனுக்கு தேவன் செய்தார். அவரைக் கொண்டு மிகப் பெரிய ஒரு தேவாலயத்தை பூமியில் கட்டினார். அதற்குத் தேவன் செய்த காரியம், அவரை ஏவி, தன் ஆவியினால் நிரப்பியிருந்தார். 1 இராஜா 3:12,13 உன் வார்த்தைகளின்படி செய்தேன், ஞானமும், உணர்வுமுள்ள இருதயத்தை உனக்குத் தந்தேன். இதிலே, ஞானத்திலே உனக்குச் சரியானவன் உனக்கு முன் இருந்ததுமில்லை, உனக்குச் சரியானவன் உனக்குப்பின் எழும்புவதுமில்லை, இதுவுமன்றி நீ கேளாத ஐசுவரியத்தையும், மகிமையையும் உனக்கு தந்தேன். உன் நாட்களில் இருக்கிற ராஜாக்களில் ஒருவனும் உனக்குச் சரியானவன் இருப்பதுமில்லை என்றார்.



அந்த ஞானத்தை வைத்து சாலொமோன் தேவனுக்காக பெரிய பெரிய காரியங்களைச் செய்தார். அதிலே அவருக்கு நிகரானவர் ஒருவரும் இல்லை என்ற அளவுக்கு ஒருவராக தேவன் யோசேப்பையும், சாலொமோனையும் இந்த பூமியிலே வைத்திருந்தார். அவருக்கு மகிமையாகப் பயன்படுத்தினார். ஆகவே தான் யோசுவாவைப் பார்த்து ஆண்டவராகிய தேவன் சொன்னார் ஒருவனும் உன்னை எதிர்த்து நிற்க முடியாது, மேற்க்கொள்ள முடியாது. ஆம் தேவன் கொடுக்கிற ஞானம் பரத்திலிருந்து வருகிறது, அது சுத்தமானது, மேன்மையானது. அந்த ஞானம் தான் பிசாசின் நயவஞ்சகங்களையும், பிசாசின் கிரியைகளையும் அழித்துப் போடுகிறதாய் இருக்கிறது. யாக் 3:17-ல் பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும், சாந்தமும், இணக்கமுள்ளதாகவும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும் பட்சபாதமில்லாததாயும் மாயமற்றதாயுமிருக்கிறது என்று சொல்லப் பட்டுள்ளது. இப்படிப்பட்ட ஞானத்தின் ஆவியைத்தான் தேவன் யோசுவாவுக்கு கொடுத்திருந்தார். உபா 34:9-ல் மோசே நூனின் குமாரனாகிய யோசுவாவின் மேல் தன் கைகளை வைத்தபடியினால், அவன் ஞானத்தின் ஆவியினால் நிறையப்பட்டான்.

அந்த ஞானமும், வல்லமையும், கிருபையும் யோசுவாவின் மேல் இறங்கினபடியால் யோசுவா செய்த காரியங்களை வேறு ஒருவனும் செய்ய முடியாதபடிக்கு தேவன் அவனை விசேஷித்தவனாக மாற்றினார், பயன்படுத்தினார். ஆகவே தான் தேவன் அவரைப் பார்த்து, ஒருவனும் உன்னை எதிர்த்து நிற்பதில்லை என்றார். இன்றைக்கு இந்த செய்தியை வாசித்துக் கொண்டிருக்கும் என் அன்பு சகோதர, சகோதரிகளே இந்த புதிய வருடத்தில் தேவன் உங்களுக்குள் ஒரு ஞானத்தின் ஆவியை அனுப்புவார், உங்கள் எதிரிகள் யாரும் உங்களை மேற்க்கொள்ள முடியாதபடி பேச்சு வல்லமையை, ஞானத்தை அருளுவார். உங்கள் குடும்பத்தை நடத்த, உங்கள் வேலையில் பிரச்சனையில்லாமல் செல்ல, உங்கள் தொழிலை, வியாபாரத்தைச் செய்ய ஞானத்தின் ஆவியைத் தருவார்.

எந்த ஒரு போராட்டம் வந்தாலும், பிரச்சனை வந்தாலும் மிக எளிதாய் சமாளிக்க கிருபை தருவார். ஆகவே தான் யோசுவாவைப் பார்த்து ஒருவனும் உன்னை எதிர்த்து நிற்பதில்லை ஏறார்

## ஒருவனும் உன் மேல் கைபோடுவதில்லை

நான் உன்னுடனே கூட இருக்கிறேன், உனக்குத் தீங்கு செய்யும்படி ஒருவனும் உன் மேல் கைபோடுவதில்லை. அப் 18:10. ஒருவனும் உன்னை எதிர்ப்பதில்லை என்றவர், ஒருவனும் உன் மேல் கைபோடுவதில்லை என்கிறார். இன்றைக்கு நாம் தேவ சித்தம் செய்யும் போது, தேவ பாதையில் போகும் போது சாத்தான் சும்மா இருக்க மாட்டான், நம்மை எந்த வகையிலாகிலும் முடக்கவும், அழிக்கவும் நினைப்பான். இப்படித்தான் அவன் யோபுவை எதிர்த்தான், போராடினான். காரணம் யோபுவைக் குறித்து தேவன் நற்சான்று கொடுத்து, அவனைப் போல் பொல்லாப்புக்குப் பயப்படுகிறவன் ஒருவனும் இல்லை என்றார். யோபு 1:8-ல் கர்த்தர் சாத்தானை நோக்கி, என் தாசனாகிய யோபுவின் மேல் கவனம் வைத்தாயோ உத்தமனும், சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகிய அவனைப் போல ஒருவன் பூமியில் இல்லை என்றார். ஆம் தேவனுக்கு பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவன் என்றார். இப்படி சொன்னதும் யோபுவின் மேல் சாத்தான் கவனம் வைத்தான். அவன் மேல் கைபோடவும், அழிக்கவும், கொல்லவும் பல காரியங்களைச் செய்தான். ஆனால் தேவன் யோபுவை கைவிடவில்லை, அவனுக்கு துணை நின்று, அவனை மீண்டும் நிலைநிறுத்தி, இழந்த எல்லாவற்றையும் திரும்ப கொடுத்தார். ஆம் பிசாசானவன் ஒரு தேவ பிள்ளைக்கு விரோதி, அவன் எதிர்க்கிறவன், தடைபண்ணுகிறவன்.

தானியேல் ஜெபித்த போது, தேசத்திற்காக நற்காரியங்களைச் செய்த போது எதிர்த்து தடுத்தவன். தானி 10:13-ல் பெர்சியா ராஜ்யத்தின் அதிபதி இருபத்தொரு நாள் மட்டும் என்னோடு எதிர்த்து நின்றான். ஆனாலும் பிரதான அதிபதிகளில் ஒருவனாகிய மிகாவேல் எனக்கு உதவியாக வந்தான் என்றார். அதன் பிறகு வானம் திறக்கப்பட்டது. ஜெபத்திற்கு பதில் வந்தது, தடைகள் நீங்கியது. சாத்தான் எப்பொழுதும் தந்திரமாக செயல்படுவான். தாவீதைக் கொல்ல சவுல் திட்டமிட்ட போது 1 சாமு 18:25-ல் தாவீதை பெலிஸ்தருடைய



கையிலே விழப்பண்ணுவதே சவுலுடைய எண்ணமாயிருந்தது. ஆம் சாத்தான் நம்மை நேரடியாகவும், மறைமுகமாகவும் எதிர்ப்பான். ஏதாவது ஒரு கண்ணியில் அகப்படுத்தி விடவே நினைப்பான். ஆகவே தான் வேதத்தில் பேதுரு சொல்லுகிறார் 1 பேதுரு 5:8,9-ல் விசுவாசத்தில் உறுதியாயிருந்து அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள் என்றார். நாம் சாத்தானையும், அவனுடைய கிரியைகளையும் எதிர்த்து நிற்க வேண்டும். அவன் நம்மை முடக்குவதையோ, அழிப்பதையோ பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. பவுல் சொல்லுகிறார் எபே 6:11-ல் நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர் களாகும்படி தேவனுடைய சர்வாயுதவர்க் கத்தையும் தரித்துக் கொள்ளுங்கள் என்றார். பிசாசினுடைய ஒவ்வொரு கிரியைகளையும் அழிக்கத்தான் தேவன் இந்த பூமிக்கு இறங்கி வந்தார். 1 யோவா 3:8-ல் பிசாசின் கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார் என்று சொல்லப்பட்டுள்ளது. இந்த பொல்லாத ஆவி தான் சில மனிதர்களைத் தூண்டி விரோதமாக செயல்படவும், எதிர்க்கவும் ஆரம்பிக்கிறது. இப்படி எதிர்க்கின்ற, போராடுகின்ற எந்த ஒரு காரியத்திலும் யாரும் உங்களைத் தொடவோ, கைபோடவோ தேவன் விடமாட்டார். ஆகவே தான் பவுலுக்குச் சொன்னார். ஒருவனும் உன் மேல் கைபோடுவதில்லை என்றார். ஒருமுறை



தேவனால் அழைக்கப்பட்டு, பயன்படுத்தப்பட்டு, பிறகு தேவனுடைய வழியை விட்டு விலகினால் கூட தேவன் மற்றவர்கள் கைபோடவோ, துன்புறுத்தவோ விடமாட்டார். இதைத்தான் தாவீது சொல்லுகிறார் 1 சாமு 26:9-ல் கர்த்தர் அபிஷேகம் பண்ணுவித்தவர் மேல் தன் கையைப் போட்டு குற்றமில்லாமல் போகிறவன் யார்? என்றார். ஆம் சவுலைக் கூட யாரும் கைபோட விடவில்லை. இன்றைக்கு தேவனால் அழைக்கப்பட்டு, அபிஷேகம் பண்ணப்பட்டவர்களுக்கு தேவனுடைய பாதுகாப்பு இருக்கிறது. உங்கள் கால் கல்லின் மேல் மோதாதபடிக்கு தூதர்களுக்கு கட்டளையிடுவார் என்று சங்கீதம் 91-ல் சொல்லப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல எபி 1:14-ல் இரட்சிப்பை சுதந்தரிக்கப் போகிறவர்களின் நிமித்தமாக ஊழியம் செய்யும்படி அவர்கள் எல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. யோசுவா தேவனால் அழைக்கப்பட்டு, ஞானத்தின் ஆவியால் அபிஷேகம் பண்ணப்பட்டு தேவ ஊழியத்தை செய்தபடியால் கர்த்தருடைய கரம் அவரோடிருந்தது. இன்றைக்கு ஒரு பிரதம மந்திரியோ, ஜனாதிபதியோ, முதலமைச்சரோ ரோட்டில் நடந்து சென்றால் அவர்களுக்கு எந்த இடையூறும் இல்லாமல், தடையும் இல்லாமல் ஆங்காங்கே காவல் துறையினர் ரோட்டில் நின்று சரி செய்கின்றனர் அல்லவாஅது போலத்தான் யோசுவா ஜனங்களை நடத்தும் போது கர்த்தர் இரவிலே அக்கினி

ஸ்தம்பம் மூலமாகவும், பகலிலே மேகஸ்தம்பம் மூலமாகவும் பலத்த பாதுகாப்போடு யோசுவாவையும், இஸ்ரவேல் ஜனங்களையும் நடத்திக் கொண்டு சென்றார். அதினால் ஒருவனும் குறுக்கே வரவோ, வீணாக தலையிடவோ, எதிர்க்கவோ விடவில்லை. அதனால் தான் சொன்னார் நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் ஒருவனும் உனக்கு முன்பாக எதிர்த்து நிற்பதில்லை என்றார். இன்றைக்கு இந்த செய்தியை வாசிக்கின்ற அன்பு சகோதர, சகோதரிகளே இந்த புதிய வருடத்திலே தேவனுடைய பலத்த கையினால் நீங்கள் ஆதரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு நீங்கள் அற்புதமாய், ஆச்சரியமாய் நடத்தப்படுவீர்கள். உங்கள் வேலையில், உங்கள் வியாபாரத்தில், உங்கள் தொழிலில், உங்கள் பிள்ளைகளின் படிப்பில், பணத்தேவைகளில், நெருக்கடியைக் கொடுக்கிற, எதிர்ப்பைக் கொடுக்கிற எல்லாக் காரியங்களையும் மாற்றி தேவன் அற்புதமாய் நடத்துவார்.

கவலைப்படாதிருங்கள், அதனால் தான் தேவன் சொன்னார் ஒருவனும் உங்களை எதிர்த்து நிற்பதில்லை என்று யோசுவாவுக்கு வாக்கு கொடுத்தார். அந்த வார்த்தையை தேவன் இந்த 2024-ல் உங்களுக்கு கொடுத்து, உங்களை அற்புதமாய் நடத்துவார். மட்டுமல்ல சங் 105:37-ல் அப்பொழுது அவர்களை வெள்ளியோடும் பொன்னோடும் புறப்படப் பண்ணினார். அவர்கள் கோத்திரங்களில் பலவீனப்பட்டவன் ஒருவனும் இருந்ததில்லை என்றார். ஒருவனுமில்லை என்றவர் இந்த வருஷத்திலே யாருக்கும் எதிலும் எந்த ஒரு பாதிப்பும் வராமல் ஆவியிலே, ஆத்துமாவிலே, சரீரத்திலே நல்ல பெலத்தை, சுகத்தை, ஆரோக்கியத்தைக் கட்டளையிடுவார். தேவையில்லாத மருத்துவ செலவையும், போராட்டங்களையும் மாற்றி நல்ல பெலத்தையும், சுகத்தையும் தந்து ஆசீர்வதித்து நடத்துவார். அவர்கள் கோத்திரங்களில் பெலவீனப்பட்டவன் ஒருவனும் இல்லை என்ற வார்த்தையின்படி எந்த ஒரு பெலவீனமும் யாருக்கும் வராதபடிக்கு ஒருவனும் பலவீனன் அல்ல என்று சொல்லுகிற அளவுக்கு சுகத்தையும், ஆரோக்கியத்தையும் தந்து இந்த புதிய வருடத்திலே உங்களை அற்புதமாய், ஆச்சரியமாய் நடத்துவார். ஒருவனும் எந்த காரியத்திலும் உங்களை எதிர்த்து நிற்பதில்லை என்ற வார்த்தையின்படி தேவ கிருபையால் ஆசீர்வதித்து நடத்துவார்.





# என் கை உன்னோடே உறுதியாயிருக்கும்

சகோதரி. கலா வின்சென்ட்ராஜ்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் புத்தாண்டு வாழ்த்துக்கள்! கடந்த வருஷமெல்லாம் நம்மோடே கூட இருந்த நம்முடைய தேவனாகிய கர்த்தர்! வருஷங்கள் கடந்து போய்க் கொண்டிருந்தாலும் எப்பொழுதும் நம்மோடு கூட இருக்கிறார். தாவீதின் வாழ்வில் அவன் ஆடுகளின் பின்னே அலைந்தவன், வீட்டாரால் புறக்கணிக்கப்பட்டவன், எந்த வசதியையும் அனுபவித்திராதவன், வீட்டில் உண்ணும் ருசிகரமான உணவு அவனுக்கு கிடைக்கவில்லை, பாதுகாப்பாய் ஓய்வெடுக்கும் அறைகள் அவனுக்கு இல்லை, ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கும் போதே கர்த்தர் என் மேய்ப்பர், அவர் என்னையும் இப்படித்தானே மேய்த்துப் பாதுகாக்கிறார் என்று நன்றி உணர்வோடு நினைத்தான். ஆண்டவர் தாவீதைக் கண்டு விட்டார், சங் 89:21-ல் என் கை அவனோடே உறுதியாயிருக்கும், என் புயம் அவனைப் பலப்படுத்தும் என்று தாவீதுக்கு என்ன செய்யப் போகிறேன் என்பதை ஆண்டவர் சொன்னார். சத்துரு, நியாயக்கேட்டின் மகன் அவனை ஒடுக்குவதில்லை. சத்துருக்களை மடங்கடித்து விடுவேன், என் உண்மையும், கிருபையும் அவனோடிருக்கும், என் நாமத்தினால் அவன் கொம்பு உயரும். எப்படியெல்லாம் அவனை மேன்மைப்படுத்துவேன் என்றும், அவனைக் கண்டு பிடித்து என் பரிசுத்த தைலத்தினால் அவனை அபிஷேகம் பண்ணினேன் என்கிறார். எத்தனை மகிழ்ச்சி! தாவீதைக் கண்டு பிடித்து தமது பரிசுத்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணி, என் கை அவனோடு உறுதியாய் இருக்கும் என்று சொன்னவர் இன்றைக்கு நம்மைப் பார்த்து என் கை உன்னோடே உறுதியாய் இருக்கும் என்று சொல்லுகிறார். எது நம் வாழ்வில் இருந்தாலும், இல்லாமல் இருந்தாலும் கர்த்தருடைய கை, கரம் நம்மோடு இருந்தால் அதைப் போல பாக்கியமானது ஒன்றுமே இல்லை. அதை அறிந்த **யாபேஸ்** 1 நாளா 4:10-ல் இஸ்ரவேலின் தேவனை நோக்கி, தேவரீர் என்னை ஆசீர்வதித்து, என் எல்லையைப் பெரிதாக்கி, உமது கரம் என்னோடிருந்து தீங்கு என்னைத் துக்கப்படுத்தாதபடிக்கு அதற்கு என்னை விலக்கிக் காத்தருளும் என்று வேண்டிக் கொண்டான். அவன் வேண்டிக் கொண்டதை தேவன் அருளினார். உமது கரம் என்னோடிருக்கட்டும் என்றார்.

அப்படியே தேவன் நம் கூட இருந்து என்ன செய்யப்போகிறார் சங் 81:6-ல் அவன் தோளைச் சுமைக்கு விலக்கினேன், அவன் கைகள் கூடைக்கு நீங்கலாக்கப்பட்டது. எகிப்திலே செங்கல் சுமந்து, சுமந்து களைத்துப் போன இஸ்ரவேலரை, தோளைச் சுமைக்கு நீங்கலாக்கி, கைகளை கூடைக்கு நீங்கலாக்கினவர், நம்மையும், இதுவரை சுமந்து இளைத்துப் போன நம்முடைய பாரங்கள், கவலைகள், சுமைகள், போராட்டங்கள் எல்லாவற்றையும் நம்மை விட்டு நீங்கலாக்கி விடுவிப்பார்.

சங் 91:11,12-ல் உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார். உன் பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உன்னைத் தங்கள் கைகளில் ஏந்திக் கொண்டு போவார்கள். நம் வழிகள் எல்லாவற்றிலும் நம்மைக் காக்கும்படி நம் கூடவே இருக்கப் போகிறார்.

சோதோம் கொமோராவின் பாவத்தின் நிமித்தம் அந்த பட்டணத்தை அழிக்க தேவன் தம் தூதர்களை அனுப்பிய போது அங்கிருந்த ஜனங்கள் பாவத்தின் கொடூரத்திற்கு அங்கு புதிதாய் வந்த புருஷர்களை வெளியே அனுப்பும்படி லோத்திடம் போராடிக் கொண்டிருந்தனர். ஆதி 19:10,11-ல் அப்பொழுது அந்தப் புருஷர்கள் (தூதர்கள்) தங்கள் கைகளை வெளியே நீட்டி, லோத்தைத் தங்கள் அண்டைக்கு வீட்டுக்குள் இழுத்துக் கொண்டு கதவை பூட்டி, தெரு வாசலிலிருந்த சிறியோரும், பெரியோருமாகிய மனிதருக்குக் குருட்டாட்டம் பிடிக்கப் பண்ணினார்கள். அப்பொழுது அவர்கள் வாசலைத் தேடித்தேடி அலுத்துப் போனார்கள் என்று வாசிக்கிறபடி நம்மை அழிக்க, நமக்கு விரோதமாய் எழும்புகிற சத்துருக்கள் கையில் நம்மை ஒப்புக்கொடாமல் நம்மை பாதுகாப்பார். நம் வாழ்விலோ, தேசத்திலோ காணப்படுகிற கொடூரமான தீமைகளை அழித்து தேவன் பாதுகாப்பார்.


எஸ்றா 7:9-ல் முதலாம் மாதம் முதல் தேதியிலே அவன் பாபிலோனிலிருந்து பிரயாணமாகப் புறப்பட்டு. ஐந்தாம் மாதம் முதல் தேதியிலே தன் தேவனுடைய தயவுள்ள கரம் தன் மேல் இருந்ததினால் எருசலேமுக்கு வந்தான். இன்னும் எஸ்றா சிறையிருப்பிலிருந்து, பாபிலோனுக்கு கொண்டு போகப்பட்ட நிலையிலிருந்து தேவ கரம் அவனோடு இருந்ததால் எருசலேமுக்கு வருகிறான். நாமும் கூட தேவனை விட்டு விலகியோ, பின்வாங்கியோ அல்லது சிறைபிடிக்கப்பட்டு கொண்டு போகப்பட்டோ இருந்தோமானால் தேவ கரம் நம்மை எருசலேமுக்கு, தேவ சமுகத்துக்கு கொண்டு வரும். எஸ்றா மாத்திரம் அல்ல அவனோடு ஒரு கூட்டமே செல்கிறது. 13 ஆம் வசனத்தில் ராஜ கட்டளையாக உன்னோடுகூட எருசலேமுக்கு போக மனப்பூர்வமாய் இருக்கிற யாவரும் போகலாம் என்று நம்மாலே உத்தரவாகிறது என்றான். தாவீது வாழ்வில் கர்த்தருடைய கை இருந்ததற்க்கு அவன் கைகளில் சுத்தம் இருந்தது. சங் 18:20 கர்த்தர் என் நீதிக்குத்தக்கதாக எனக்குப் பலனளித்தார், என் கைகளின் சுத்தத்திற்குத்தக்கதாக எனக்குச் சரிக்கட்டினார் என்கிறான். வேலை செய்கிறவர்கள் பெரும்பாலும் கையில் சுத்தமும் (திருடும்) வாயில் பொய்யும் இருக்கக் கூடாது என்று எல்லோருமே எதிர்பார்ப்பது தான். அவர்களை நம்பி எந்தப் பொருளையும் நாம் ஒப்படைப்போமல்லவா? தாவீது சங் 24:3,4-ல் யார் கர்த்தருடைய பர்வதத்தில் ஏறுவான்?, யார் அவருடைய

**நம்மை அழிக்க, நமக்கு விரோதமாய் எழும்புகிற சத்துருக்கள் கையில் நம்மை ஒப்புக்கொடாமல், நம் வாழ்விலோ, நம் தேசத்திலோ காணப்படுகிற கொடூரமான தீமைகளை அழித்து தேவன் நம்மை பாதுகாப்பார்.**

பரிசுத்த ஸ்தலத்தில் நிலைத்திருப்பான்?, கைகளில் சுத்தமுள்ளவனும், இருதயத்தில் மாசில்லாதவனுமாயிருந்து, தன் ஆத்துமாவை மாயைக்கு ஒப்புக்கொடாமலும், கபடாய் ஆணையிடாமலும் இருக்கிறவனே என்று சொல்லிவிட்டு சங் 26:7-ல் நான் குற்றமில்லாமையிலே என் கைகளைக் கழுவி, உம்முடைய பீடத்தைச் சுற்றி வருகிறேன் என்கிறான். ஒருவேளை என் வாழ்வில், என் கைகளில் நீர் சுத்தமில்லாததை காண்பீராகில் குற்றமில்லாமையிலே என் கைகளைக் கழுவினேன் என்கிறான். பாருங்கள் சங் 89:49-ல் ஆண்டவரே, நீர் தாவீதுக்கு உம்முடைய உண்மையைக் கொண்டு சத்தியம் பண்ணின உமது பூர்வ கிருபைகள் எங்கே? என்று கதறுகிறான். அதைப் போல நாமும் கதறுவோமானால் தேவன் நமக்கு இரங்குவார். நம்முடைய வாழ்விலும் அறியாமலோ, தெரியாமலோ சுத்தமற்ற நிலை உண்டாகி விட்டால் குற்றமில்லாமல் நம்மை இயேசுவின் இரத்தத்தால் கழுவி பரிசுத்தமடைந்து விட வேண்டும். இயேசு கிறிஸ்துவின் இரத்தம் நம்முடைய சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும்.

## உயர்த்தும் கை

யோசேப்பின் வாழ்விலே, தாவீதைப் போலவே உபத்திரவங்களை சந்தித்தவன், சொந்த சகோதரர்களாலே வெறுக்கப்பட்டு, அடிமையாய் விற்கப்பட்டவன். பொய் குற்றம் சாட்டப்பட்டு சிறைப்பட்டுப் போனவன். எத்தனை வேதனை! குடும்பத்தால் புறக்கணிக்கப்பட்டு, வேலைக்குச் சென்றால் அங்கும் உபத்திரவம், அவனை விடவில்லை. ஆனால் குறிப்பிட்ட காலம் வரைதான் உபத்திரவம் அனுபவித்தான். தேவன் அவனை உயர்த்தினார். ஆதி 49:22-24-ல் யோசேப்பு கனி தரும் செடி, அவன் நீர் ஊற்றண்டையிலுள்ள கனிதரும் செடி, அதின் கொடிகள் சுவரின் மேல் படரும், வில்வீரர் அவனை மனமடிவாக்கி, அவன் மேல் எய்து, அவனைப் பகைத்தார்கள். ஆனாலும் அவனுடைய வில் உறுதியாய் நின்றது. அவன் புயங்கள் யாக்கோபுடைய வல்லவரின் கரங்களால் பலத்தன. இதினாலே அவன் மேய்ப்பனும், இஸ்ரவேலின் கன்மலையும் ஆனான் என்று யாக்கோபு ஆசீர்வதித்ததை பார்க்கிறோம். வில்வீரர் அவனை மனமடிவாக்கினார்கள். ஆனாலும் அவனுடைய வில் உறுதியாய் நின்றது. அவன் புயங்கள் யாக்கோபின்



வல்லவரின் கரங்களால் பலத்தன. இந்த தேவனின் கரம் நம்மோடு இருந்தால் எத்தனை விதமான வில்வீரர் நம்மீது வில்லை எய்தாலும் நாம் உறுதியாய் நிற்போம். நம் புயங்கள் அவரின் வல்ல கரத்தால் பலக்கும். இந்த கரம் நம்மோடு உறுதியாய் இருக்கும். எத்தனை உபத்திரவம் வந்தாலும் தேவ கரம் நம்மோடிருக்கிறது. கர்த்தர் யோசேப்போடே இருந்தார், அவர் கரம் அவனை உயர்த்தியது.

யோசுவாவை தேவன் கனப்படுத்தினார். மோசே தனக்குப் பின்னாக கர்த்தர் யோசுவாவை கனம் பண்ணுவார் என்று எல்லாருக்கும் முன்பாக நிறுத்தி எண் 27:23-ல் அவன் மேல் தன் கைகளை வைத்து, கர்த்தர் தனக்குச் சொன்னபடியே அவனுக்குக் கட்டளை கொடுத்தான். 18,19 வசனங்களிலும் வாசிக்கிறோம். அதே போல மோசேயோடே இருந்தது போல உன்னோடும் இருக்கிறேன் என்பதை இஸ்ரவேலரெல்லாரும் அறியும்படிக்கு இன்று அவர்கள் கண்களுக்கு முன்பாக உன்னை மேன்மைப்படுத்துவேன் என்று, யோர்தானில் தண்ணீர் பிரியும்படியும், ஜனங்கள் வெட்டாந்தரையில் நடந்து, மோசேயோடு இருந்தது போலவே ஜனங்களின் கண்களுக்கு முன்பாக மேன்மைப்படுத்தினார். அதே தேவன் நமக்கும் செய்வார், நம்மையும் உயர்த்துவார்.ஏசா 63:12,13-ல் மோசேயின் வலது கையைக் கொண்டு அவர்களை தமது மகிமையின் புயத்தினால் நடத்தி, தமக்கு நித்திய கீர்த்தியை உண்டாக்க, அவர்களுக்கு முன்பாகத் தண்ணீரைப் பிளந்து, ஒரு குதிரை வனாந்தர வெளியிலே நடக்கிறது போல, ஆழங்களில் நடக்கப்பண்ணினவர் எங்கே? என்று கெஞ்சி ஜெபிப்போமா.



## சுகமாக்கும் கை

ஜெப ஆலயத்தில் கொஞ்சமும் நிமிரக்கூடாத கூனிப் பெண் இருந்தாள். பலவீனப்படுத்தும் ஆவியால் பாதிக்கப்பட்டு வேதனைப்பட்டுக் கொண்டிருந்த அவளை இயேசு தம்மிடம் வரவழைத்து. லூக் 13:13-ல் அவள் மேல் தமது கைகளை வைத்தார். உடனே அவள் நிமிர்ந்து, தேவனை மகிமைப் படுத்தினாள். உங்கள் வாழ்வில் கூட நிமிரமுடியாத ஏதோ பலவீனத்தினால் பாதிக்கப்பட்டிருக்கிறீர்களா? சரீரத்தில் ஏதோ வலியோடு என்னவென்று தெரியாமல், மருந்துகள் எடுத்தும் சுகமடையாமல் கஷ்டப் படுகிறீர்களா? இயேசு இன்று உங்கள் மேல் தம் கைகளை வைப்பார். உடனே நீங்கள் விடுதலையைப் பெறுவீர்கள். விசுவாசியுங்கள். அதே போல பெத்சாயிதா ஊரிலே ஒரு கண் தெரியாத குருடனைக் தொடும்படி கொண்டு வந்த போது மாற் 8:23-26-ல் அவனை வெளியே அழைத்துக் கொண்டு போய், அவன் கண்களில் உமிழ்ந்து அவன்மேல் கைகளை வைத்து, எதையாகிலும் காண்கிறாயா என்று கேட்டார். அவன் ஏறிட்டுப் பார்த்து நடக்கிற மனுஷரை மரங்களைப் போலக் காண்கிறேன் என்ற போது, அவர் மறுபடியும் அவன் கண்களின் மேல் கைகளை வைத்து, அவனை ஏறிட்டுப் பார்க்கும்படி செய்தார். அவன் சொஸ்தமடைந்து யாவரையும் தெளிவாக கண்டான் என்று வாசிக்கிறோம். நம்மை சுகமாக்குகிற இயேசுவின் கை நம்மேல் வைக்கப்பட்டால் போதும் நாம் சுகமடைவோம்.

## சத்துருக்களுக்கு எதிராகும் கை


தம் ஜனத்திற்காக எழும்புகிற கர்த்தர் நம்மோடு இருக்கிறார். சங் 81:14-ல் நான் சீக்கிரத்தில் அவர்கள் எதிராளிகளைத் தாழ்த்தி, என் கையை அவர்கள் சத்துருக்களுக்கு விரோதமாகத் திருப்புவேன். பார்வோன், இஸ்ரவேலை ஒடுக்கும் போது தேவன் மோசேயை அழைத்தார்.
யாத் 3:19,20-ல் ஆனாலும் எகிப்தின் ராஜா கை வல்லமை கண்டாலொழிய உங்களைப் போக விடான் என்று நான் அறிவேன். ஆகையால் நான்
என் கையை நீட்டி, எகிப்தின் நடுவிலே நான் செய்யும் சகலவித அற்புதங்களாலும் அதை வாதிப்பேன் அதற்குப்பின் அவன் உங்களைப் போக விடுவான் என்றார். அதன்படி கர்த்தரின்
கைவல்லமை வெளிப்பட்டது. சத்துருக்களுக்கு விரோதமாக கர்த்தர் எழுந்தார், எகிப்திலிருந்து அனுப்பப்பட்டார்கள். யாத் 7:4,5-லும் அதைப்பற்றி வாசிக்கிறோம். ஜனங்களை அனுப்பி விட்ட பிறகு துரத்திக் கொண்டு பார்வோன் சேனை வருகிறது. முன்பாக செங்கடல் ஜனங்கள் தத்தளித்த போது கர்த்தர் என்ன செய்தார் என்று மோசேயும், மிரியாமும், ஜனங்களும் பாடுகிறார்கள்
யாத் 15:6,7-ல் கர்த்தாவே! உம்முடைய வலதுகரம் பலத்தினால் மகத்துவம் சிறந்திருக்கிறது. கர்த்தாவே! உம்முடைய வலதுகரம் பகைஞனை நொறுக்கி விட்டது அதற்கு முன்பாக பகைஞன் என்ன சொன்னான் என்று 9 ஆம் வசனத்தில் தொடருவேன், பிடிப்பேன், கொள்ளையாடிப் பங்கிடுவேன், என் ஆசை அவர்களிடத்தில் திருப்தியாகும், என் பட்டயத்தை உருவுவேன், என் கை அவர்களை சங்கரிக்கும் என்று பகைஞன் சொன்னான் என்று வாசிக்கிறோம். என் கை அவர்களை சங்கரிக்கும் என்று சொன்ன பார்வோனின் சேனைக்கு, கர்த்தரின் கை எதிரானது. அவரது வலதுகரம் பகைஞனை நொறுக்கி விட்டது அல்லேலூயா.



## உங்கள் கைகள் திடப்படக்கடவது

எந்த காரியம் நமக்கு நடக்காமல் இருந்தாலும், தாமதித்தாலும் தளர்ந்து போகிறோம்.
சக 8:13-ல் யூதா வம்சத்தாரே, இஸ்ரவேல் வம்சத்தாரே, நீங்கள் புறஜாதிகளுக்குள்ளே சாபமாயிருந்தது போலவே, ஆசீர்வாதமாயிருக்கும்படி நான் உங்களை இரட்சிப்பேன். பயப்படாதேயுங்கள், உங்கள் கைகள் திடப்படக்கடவது, இதுவரை நீங்கள் சாபமாயிருந்த காரியத்தில் தேவன் ஆசீர்வாத மாயிருக்கும்படி இரட்சிக்கப் போகிறார். எனவே உங்கள் கைகள் திடப்படட்டும் சக 4:9-லும் செருபாபேலின் கைகள் இந்த ஆலயத்துக்கு அஸ்திபாரம் போட்டது, அவன் கைகளே இதை முடித்துத் தீர்க்கும், அதினால் சேனைகளின் கர்த்தர் என்னை உங்களிடத்திற்கு அனுப்பினாரென்று அறிவாய் என்று ஆண்டவர் சொல்லுகிறார். எஸ்றா, நெகேமியா நாட்களில் ஆலயம் கட்ட ஏற்பட்ட எதிர்ப்புகளில், கர்த்தர் கரம் அவர்களோடே இருந்து, அவர்களை திடப்படுத்தி வேலையை நடத்த, ஆலயத்தைக் கட்ட கூட இருந்தது போல, அவர்களுக்கான

பொருளாதாரத்தை சந்தித்தது போல, ராஜ அனுமதி கிடைத்தது போல நமக்கும் தேவகரம் கூட இருந்து ஆலய வேலையிலே நம்மையும் திடப்படுத்தும்.நமது சரீரமாகிய ஆலயத்தை கட்டவும், அவருக்காக வாழ்கிற வாழ்விலும் கர்த்தர் நம்மை திடப்படுத்துவார். எத்தனையோ எதிர்ப்புகளை, ஏளனங்களை, தடைகளை, பயமுறுத்தல்களை எஸ்றாவும், நெகேமியாவும் சந்தித்தார்கள். நெகே 6:9-ல் அந்த வேலை நடந்தேறாதபடிக்கு, எங்கள் கைகள் சலித்துப் போம் என்று சொல்லி, அவர்கள் எல்லாரும் எங்களைப் பயமுறுத்தப் பார்த்தார்கள். ஆதலால் தேவனே, நீர் என் கைகளைத் திடப்படுத்தியருளும் என்று ஜெபித்த ஜெபத்தைக் கேட்டு அவர்களை பெலப்படுத்திய தேவகரம் நம்மையும் திடப்படுத்தும்.



செப் 3:16-ல் எருசலேமைப் பார்த்து பயப்படாதே என்றும், சீயோனைப் பார்த்து உன் கைகளைத் தளரவிடாதே என்றும் சொல்லப்படும் என்று ஆண்டவர் சொல்கிறார். தளர்ந்துவிடாதே, திடன்கொள். தொடர்ந்து ஓடு, பலப்படு என்று ஆண்டவர் நம்மை தைரியப்படுத்துகிறார். யோவா 10:28,29-ல் நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன், அவைகள் ஒருக்காலும் கெட்டுப் போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக் கொள்வதுமில்லை, அவைகளை எனக்குத் தந்த என் பிதா எல்லாரிலும் பெரியவராயிருக்கிறார். அவைகளை என் பிதாவின் கையிலிருந்து பறித்துக் கொள்ள ஒருவனாலும் கூடாது என்று இயேசு சொல்லுகிறார்.

நம்மை ஆண்டவர் இயேசுவின் கையிலிருந்து எதுவும் பிரிக்கவோ, பறிக்கவோ முடியாது. ஒவ்வொரு நாளும் அவர் கைக்குள்ளான ஆடாக நாம் நம்மை அர்ப்பணித்து வாழும் போது. நம் ஆத்துமா தப்புவிக்கப்படும், சத்துரு நம்மைத் தொட முடியாது. அவர் நமக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறார். 1 இராஜா 18:46-ல் கர்த்தருடைய கை எலியாவின் மேல் இருந்ததினால், அவன் தன் அரையைக் கட்டிக்கொண்டு யெஸ்ரயேலுக்கு வருமட்டாக ஆகாபுக்கு முன் ஓடினான் நம்மையும், உலகத்திற்கு முன்பாக, மாம்சம், பிசாசுக்கு முன்பாக ஓடப்பண்ணுவார். தாவீதோடே கூட உறுதியாய் இருந்த கரம், இந்த புதிய வருடத்தில் நம்மையும் உயர்த்தும், சுகமாக்கிப் பாதுகாத்து, எதிர்ப்பிலிருந்து விடுவித்து நம்மை திடப்படுத்தும், எனவே மனம் கலங்காதிருங்கள். உங்கள் கைகளை திடப்படுத்துகிறவர் கூட இருக்கிறார். கைகளை உறுதியாகப் பலப்படுத்துகிறவர் நம்மோடு இருக்கிறார். எதிர்ப்புகளும், தீமைகளும் பின்னிட்டுப் போகும். நாம் முன்னேறிப் போவோம். என் ஆண்டவர் இயேசு தாமே சொன்னபடியே நம்மோடு அவரது கையை உறுதிப்படுத்துவார் !



# நீ பிரகாசிப்பதற்கான உன் வேளை வந்துவிட்டது

## It's your time and turn to SHINE

சகோதரி. பிரேமாடேவிட்

எழும்பிப் பிரகாசி, உன் ஒளி வந்தது, கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது. இதோ, இருள் பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடும், ஆனாலும் கர்த்தர் உன்மேல் உதிப்பார், அவருடைய மகிமை உன்மேல் காணப்படும். ஏசாயா 60:1,2

எந்த மனிதனையும், எப்பேர் பட்டவர்களையும், நம்மையும் பிரகாசிக்கச் செய்கிறவராகிய மெய்யான ஒளியாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

கடந்த ஆண்டு முழுவதும் கண்மணி போல நம்மைக் காத்து, புதிய ஆண்டைக் காணச் செய்த தேவனுக்கு நன்றி சொல்லுவோம். என்ன பெரிசா புதிய ஆண்டு என்று நினைக்க வேண்டாம். காலண்டரைத் தான் மாத்திப் போடுகிறோம் அதே இரவு பகல், அதே மனிதர்கள், அதே வீடு, அதே சூழ்நிலை, நேற்று இருந்த பிரச்சனை அப்படியே தான் இருக்கப்போகுது, நாளுக்கு நாள் தேவைகளும், பிரச்சனைகளும் கூடத்தானே போகுது தவிர வேறொன்றும் புதிசு இல்லையே என்ற உங்கள் உள்மனதின் எண்ணங்களை அறிந்த ஆண்டவர் சொல்லுகிறார் எல்லாவற்றிற்கும் ஒரு சமயமுண்டு பண்ம்ங், ஒவ்வொன்றுக்கும் ஒரு காலமுண்டு, நான் அதினதின் காலத்தில் நேர்த்தியாக, அழகாக, சிறப்பாக செய்கிற தேவன். (பிர 3:11) உன் காலங்கள் என் கரத்திலிருக்கிறது. (சங் 31:15). நீ என்னிடம் வந்து விடு, உன்னை Heart என்னிடம் கொடுத்துவிடு. அப்பொழுது உலகமே இருண்டிருந்தாலும் (உனக்குள்) ஒளியாகிய நான் உன்மேல் உதித்து, உன்னை உலகத்துக்கு வெளிச்சமாய் வைப்பேன். என் ஒளியை உன் மூலம் உலகத்தில் பிரகாசிக்கச் செய்வேன். எனவே உன் சோர்வுகளிலிருந்தும், பயங்களிலிருந்தும், தப்பான எண்ணங்களிலிருந்தும், உலக இன்பங்கள், ஈர்ப்புகளை விட்டு எழும்பி இயேசுவாகிய எனக்காக பிரகாசி, நீ பிரகாசிப்பதற்கான உன் **Turn** சுற்று, உன் வேளை வந்துவிட்டது என்கிறார் எபே 5:14-ல் ஆதலால், தூங்குகிற நீ, விழித்து மரித்தோரை விட்டு எழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து, உன்னைப் பிரகாசிப்பாரென்று சொல்லியிருக்கிறார்.

## உங்களைப் பிரகாசிப்பிக்கும் மெய்யான ஒளி இயேசுவே

இயேசுவுக்கும் எனக்கும் சம்மந்தமே இல்லாத, பெயருக்கு கிறிஸ்தவனாக (வராக) வாழ்கிறேனே, நான் எப்படி பிரகாசிக்க முடியும் என்றும், நான் கிறிஸ்தவ குடும்பத்திலேயே பிறக்கவில்லையே, இயேசுனு சொன்னாலே போதும் என்னை குடும்பத்தை விட்டே துரத்திருவாங்களே என்று நினைக்கிற நீங்கள், எதேச்சையாக இதை வாசித்துக் கொண்டிருக்கிற உங்கள் உள்ளத்தில் இயேசுவே, என்னையும் பிரகாசிப்பிக்கிற மெய்யான ஒளி, நீங்க தான்னு நான் விசுவாசிக்கிறேன். நான் இதுவரை தொடர்பு வைத்திருந்த பிசாசின், உலகத்தின் இருளான அந்த.... செயல்களை விட்டு வருகிறேன், விட்டுவிட விரும்புகிறேன், நீர் எனக்குள் வாரும் என்று சொல்லுங்கள். ஒளியாகிய இயேசு உங்கள் உள்ளத்திற்குள் வந்து விடுவார். இருண்டிருந்த உங்கள் உள்ளம் வெளிச்சமாகி விட்டது. நிறைவாகிய கிறிஸ்து உங்கள் உள்ளத்தில் மகிமையின் நம்பிக்கையாக வந்து விட்டதால், இனி இந்த ஆண்டில் நீங்கள் பிரகாசிப்பிக்கிற விளக்காயிருப்பீர்கள்.

இதைத்தான் தாவீது சொல்லுகிறார் தேவரீர் என் விளக்கை ஏற்றுவீர், என் தேவனாகிய கர்த்தர் என் இருளை வெளிச்சமாக்குவார். உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்து, என் தேவனாலே ஒரு மதிலை தாண்டுவேன் சங் 18:28,29. விளக்கை ஏத்தியாச்சு, உங்களுக்குள்ளிருக்கிற வெளிச்சத்தைக் கொண்டு தாவீதைப் போல கோலியாத் போன்ற பிரச்சனைகளை ஜெயிப்பீர்கள், அதிலிருந்து வெளியே வருவீர்கள். இதுவரை எல்லாரும் டிவி பார்த்துட்டு இருக்கும் போது, குடிக்கும் போது, நான் எப்படி அதைச் செய்யாமலிருக்க முடியும் என்ற, உங்களைப் பின் தொடர்கின்றவைகளை, தவறானவைகளை, மேற்கொண்டு, இயேசுவாகிய ஒளிக்கும், இருளுக்கும் ஐக்கியமேது என்று யோசேப்பைப் போல வெளியே ஓடி வருவீர்கள்.

நான் இதுவரை தொடர்பு வைத்திருந்த பிசாசின், உலகத்தின் இருளான அந்த.... செயல்களை விட்டு வருகிறேன், விட்டுவிட விரும்புகிறேன், நீர் எனக்குள் வாரும் என்று சொல்லுங்கள். ஒளியாகிய இயேசு உங்கள் உள்ளத்திற்குள் வந்து விடுவார். இனி இந்த ஆண்டில் நீங்கள் பிரகாசிப்பிக்கிற விளக்காயிருப்பீர்கள்.

## மங்கி எரிகிற உங்களைப் பிரகாசிக்கச் செய்வார்

மற்றவங்களுக்கெல்லாம் நல்ல பெற்றோர், நல்ல குடும்ப பின்னணியம், திறமை, அழகெல்லாம் இருக்கு நானு Chance இல்லை, நான் எப்படி எழும்பிப் பிரகாசிக்கிறது. என் வாழ்க்கை மங்கி எரிகிற திரியைப் போல இருக்கிறதே என்று நினைக்கிறீர்களா? அவர் நெரிந்த நாணலை முறியாமலும், மங்கி எரிகிற திரியை அணையாதவர் என்னால வாழவே முடியாதுங்கிற எனக்கு எந்த Support-ம் கிடையாதே, ஒரு திறமையும் கிடையாதே, நான் எப்படி வாழ்க்கையில் Identity பண்ணமுடியும்-னு நினைக்கிறீங்க தானே! இவர் Sign பண்ணிவிட்டார். எப்படி ஆதியிலே ஆண்டவர் படைத்த பூமியை சாத்தான் கெடுத்துப் போட்டதாலே ஒழுங்கின்மையும், வெறுமையும், ஒரே இருளும் இருந்தது, அதின் மத்தியில் தான் தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார். உடனே வெளிச்சம் உண்டானது வெளிச்சத்தை தேவன் நல்லது என்று கண்டதினால் வெளிச்சத்தையும், இருளையும் வெவ்வெறாகப் பிரித்த தேவன் தான், நீங்கள் மங்கி வருஷத்தில, வாரத்தில ஒரு நாள் எரிந்தது போதும், நீங்கள் காலமெல்லாம், செல்லும் இடமெல்லாம் எங்கும் எப்பொழுதும் ஒளி

வீச வேண்டுமென்று விரும்பித்தான் வெளிச்சம் உண்டாவதாக என்று சொல்லி உங்கள் மேல் உதித்துவிட்டார். உங்கள் திரியைச் சீர்படுத்தி மறுபடியும் எரியவைப்பதற்காகத் தான் நம்பிக்கையோடு சாதனை படைக்கிறவர்களாக எழும்ப வேண்டும் என இந்த வார்த்தையை ஒளியாக அனுப்புகிறார். அவருக்குள் எவ்வளவேனும் இருள் இல்லை. உலகத்தின் இருளும் அவரைப் பற்றிக் கொள்ளவில்லை. ஏனென்றால் அவருக்குள் ஜீவன் இருந்தது. அந்த ஜீவன் தான் உங்களுக்குள் ஒளியாக, இயேசு கிறிஸ்துவாக வந்துள்ளார். அந்த ஒளி இருளில் பிரகாசிப்பிக்கிறது போல, நீங்களும் இருள் நிறைந்திருக்கும் இந்த காலங்களில் உலகில் பிரகாசிக்க முடியும், பிரகாசிக்க வேண்டும். உங்களிலுள்ள வெளிச்சம் இருளாகாதபடி எச்சரிக்கையாயிருங்கள், உங்கள் வெளிச்சத்தை மறைக்காதீர்கள். எல்லாரும் காணும் போது எழுந்து இயேசு

> **நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள், முந்தின காலம் போல் இனி நீங்கள் இருண்டிருப்பதில்லை. இந்த புதிய 2024 ஆம் ஆண்டில் ஜீவ வசனத்தைப் பிடித்துக் கொண்டு நட்சத்திரச் சுடர்களைப் போல நீங்களும் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டு எரிந்துப் பிரகாசியுங்கள்.**

# எரிந்து பிரகாசி

யோவான்ஸ்நானகன் ஒளியல்ல, ஒளியைக் குறித்து சாட்சி கொடுக்க வந்த சாட்சியாக வந்தார். கிறிஸ்துவாகிய மணவாளனின் தோழன் நான். அவர் என்னிலும் பெரியவர், மேலானவர், இதோ, உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவஆட்டுக்குட்டி, இவர் தான் தேவனுடைய குமாரன். இவர் தான் பரிசுத்த ஆவியினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறவர் என்று தனக்கு கொடுக்கப்பட்ட ஊழியத்தை, வேலையை, கடமையை நன்றாய் செய்து, அவருடைய **Field** அவர் எழும்பி பிரகாசித்தது மாத்திரமல்ல எரிந்தும் பிரகாசித்தார். எப்படியென்றால் எல்லா ஜனங்களும், ஆசாரியர்களும் நீர் தான் வரப்போகிறவராகிய மேசியாவாகிய கிறிஸ்துவா என்றதற்கு இல்லை என்றார். நீர் தீர்க்கதரிசியா என்றதற்கும் இல்லை என்றார். பின்னே நீர் யார்? என்றதற்கு நான் வனாந்தரத்தில் கூப்பிடுகிறவனுடைய சத்தமாயிருக்கிறேன் என்றார். என்னை அனுப்பினவர் பரிசுத்த ஆவியானவர் இறங்கி யார் மேல் தங்குவதைக் காண்பாயோ அவர் தான் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுக்கிறவர் என்று இயேசுவாகிய ஒளியைக் குறித்து சாட்சி சொல்லி வந்தார். மேலும் அவருடைய பாதரட்சைகளின் வாரை அவிழ்க்கிறதற்கு கூட நான் பாத்திரன் அல்ல மணவாளனின் சத்தத்தைக் கேட்டு நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும். நான் கிறிஸ்துவல்ல அவருக்கு முன்னாக அனுப்பப்பட்டவன் என்றார்.

மெழுகுவர்த்தியானது தன்னையே அழித்து, எரிந்து, வெளிச்சம் கொடுப்பது போல யோவான்ஸ்நானகன் தன்னை மறைத்துக் கொண்டு, தன்னைத் தாழ்த்தி, தான் எதற்காக அனுப்பப்பட்டாரோ அதைச் சரியாய் செய்து, சாதனை படைத்தார், இயேசுவுக்காக பிரகாசித்தார். எனவே தான் இயேசு அவரைப் பார்த்து அவன் எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருந்தான் என்று பாராட்டினார். இதை வாசிக்கின்ற நீங்களும் கூட உங்கள் **Field**, உங்க **Family, Church** உங்களுக்கான **Roll**-ல பிரகாசிப்பதற்கான நேரம் வந்துவிட்டது. மலைமேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்க முடியாது, நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள், முந்தின காலம் போல் இனி நீங்கள் இருண்டிருப்பதில்லை. இந்த புதிய 2024 ஆம் ஆண்டில் ஜீவ வசனத்தைப் பிடித்துக் கொண்டு நட்சத்திரச் சுடர்களைப் போல நீங்களும் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டு எரிந்துப் பிரகாசியுங்கள். அந்தகாரத்திலிருந்து ஆச்சரியமான ஒளிக்கு உங்களை வரவழைத்தவர் தாமே உங்கள் வாழ்வின் எல்லாப் பகுதியிலும், எல்லாத் துறையிலும் எழும்பிப் பிரகாசிக்க உதவி செய்வாராக!.





# எழுப்புதலைக் கொண்டு வந்த எஜீகேஷனல் டூர்

ஹலோ குட்டீஸ் நல்லாயிருக்கீங்களா!

**Happy new year**

அமெரிக்காவில் ஒரு பக்தியுள்ள கிறிஸ்தவ குடும்பத்தில் பில்லி அண்ணன் பிறந்தாங்க! அப்பா அம்மா சொல்றத அப்படியே கேட்டாங்க. தினந்தோறும் அவர்களது பால் பண்ணையிலிருந்து, காலை மாலை எல்லார் வீடுகளுக்கும் பாலை எடுத்துக் கொண்டு போய் கொடுப்பாங்க, ஆனா ஜெபம் பண்ணுவது, சர்ச் பிரையரில் அவ்வளவா ஆர்வமாக இருக்க மாட்டாங்க. நீங்களும் அப்படி தானே?

ஒரு தடவை நான் பிரையரிலெல்லாம் அட்டன் பண்ண மாட்டேன் சும்மா தான் வருவேன் என்று பில்லி அண்ணன் பிரையர் மீட்டிங்குக்கு போயிருந்தாங்க. ஆனா இயேசப்பா அவரை, அவர் பிள்ளையாக மாத்திட்டாங்க. அதுக்கப்புறம் இயேசப்பாவுக்காக ஊழியம் செய்ய பைபிள் காலேஜ் படிக்கப் போனாங்க. அவங்க காலேஜ்-ல இருந்து ஒரு கல்வி சுற்றுலா சென்றார்கள். இங்கிலாந்தில் ஊழியம் செய்த ஜான்வெஸ்லி அவர்கள் வாழ்ந்த இடத்திற்குப் போனாங்க. அவர் எழுதின புத்தகங்கள், நூலகம், அவர் ஜெபம் பண்ணின இடத்தை எல்லாம் மாணவர்களுக்குக் காண்பித்து, இந்த இடத்தில் தான் தினமும் மணிக்கணக்கில் ஜான்வெஸ்லி ஜெபிப்பார். ஆண்டவரிடம் வல்லமையைப் பெற்றார். எழுப்புதல் தீ இங்கிருந்து தான் இங்கிலாந்து தேசம் முழுவதும் பரவியது என்று சொன்னார்கள். கல்வி சுற்றுலாவை முடித்த பின்பு, அவர்கள் அங்கிருந்து கிளம்பும் முன் மாணவர்களைப் பேராசிரியர் கணக்கெடுத்துப் பார்த்தால் ஒரு மாணவனைக் காணவில்லை. எங்கேயாவது, யாராவது நிற்கிறார்களா என்று தேடினால் யாரையும் காணவில்லை.

ஜான்வெஸ்லி வீட்டிற்குப் போய், அங்கிருந்த நூலகம் என்று ஒவ்வொரு அறையாக தேடின போது ஜான்வெஸ்லி ஜெபித்த இடத்தில் ஒரு இளம் மாணவன் முழங்கால்படியிட்டு ஆண்டவரே, ஜான்வெஸ்லி மேல் ஊற்றின அந்த அபிஷேகத்தை எனக்கும் தாரும். திரும்பவும் அதே எழுப்புதலை ஊற்றும், என்னைக் கொண்டு செய்யும் என்று ஜெபித்துக் கொண்டிருந்த அந்த மாணவனைப் பார்த்து சந்தோஷப்பட்ட பேராசிரியர், அவன் தோள் மேல் கையை வைத்து நிச்சயம் உன் ஜெபத்தை ஆண்டவர் கேட்பார் என்று அவரை எழுப்பிக் கொண்டு வந்தார்கள். அன்று எழுந்த அந்த மாணவன், எழுப்புதலின் தீயை உருவாக்கும் வாலிபனாக மட்டுமல்ல தன் வயதான காலத்திலும் எழுப்புதல் வீரனாக மாறினார். அவர் யார்? தெரியுமா எஜீகேஷனல் டூர் போன நம்ம பில்லி அண்ணா தான். Rev. பில்லிகிரஹாம் என்ற தேவ ஊழியரான இவருடைய செய்தியைக் கேட்க கூட்டம் கூட்டமாக மக்கள் வருவார்களாம். இவருடைய வல்லமையான செய்தி கேட்டு, திருந்தவே முடியாது-னு சொல்லப்பட்ட நிறைய பேரு இரட்சிக்கப்பட்டிருக்காங்க. லட்சக்கணக்கான மக்கள் கூட்டம் இவர் கூட்டத்தில் இரட்சிக்கப்பட்டிருக்காங்க. ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்த, ஆனால் உண்மையாய் கதறி ஜெபித்த பில்லி 1918-ல் பிறந்து 2018 வரை தேவனுக்காக எழுப்புதல் வீரனாக எழும்பிப் பிரகாசித்தவர். நீங்களும் ஒரு பில்லிகிரஹாமாக மாறுவீங்களா? இப்பவே கர்த்தர் உங்களை பயன்படுத்த ஆரம்பிப்பார்.

## ஜெபம்

அன்புள்ள இயேசப்பா ஜான்வெஸ்லி, பில்லிகிரஹாம் மேலே ஊற்றின அபிஷேகத்தை, என் மேலே ஊற்றும், அதே எழுப்புதலை ஊற்றும், என்னைக் கொண்டு செய்யும் இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

## மனப்பாடவசனம்

கடைசி நாட்களில் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன். அப்பொழுது உங்கள் குமாரரும், உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனம் சொல்வார்கள், உங்கள் வாலிபர் தரிசனங்களை அடைவார்கள், உங்கள் மூப்பர் சொப்பனங்களைக் காண்பார்கள். அப் 2:17

சாட்சி பகுதி

# வேண்டுவதற்கும் நினைப்பதற்கும் அதிகமாக செய்கிறவர்



## சகோதரி. மாலதி - மதுரை

நாங்கள் கடந்த 12 ஆண்டுகளாக ஒரு வீட்டில் குடியிருந்தோம். வீட்டு ஓனர் எங்களை வீட்டை காலி பண்ண சொன்னார்கள். எனக்கு மனசெல்லாம் ஒரே பாரமாக இருந்தது, நீண்ட நாட்களாக அந்த வீட்டில் குடியிருந்தோம், அந்த வீடு போக்குவரத்திற்கு, கடைகள் மற்றும் பாதுகாப்பாக இருந்ததால் காலி செய்வது மிகவும் வருத்தமாக இருந்தது. அந்த வீட்டை விற்கிறார்கள் என்று கேள்விப்பட்டு நாங்கள் கேட்டபோது கொடுக்கவில்லை தர மறுத்தார்கள். நாங்கள் வீட்டை காலி செய்த 1 வாரத்தில் வீடு விற்பனைக்கு என்று தெரிந்து மீண்டும் கேட்டோம் தர மறுத்தார்கள். அடுத்த நாள் சனிக்கிழமை வீடு வாங்குவது குறித்து பேசப் போக வேண்டும் என்ற சூழ்நிலையில் நான் என் வீட்டில் உள்ளவர்களிடம் சொன்னேன், அந்த வீட்டை தேவன் எனக்குத் தர சித்தமாயிருந்தால் கட்டாயம் தருவார், நான் மதுரை எழுப்புதல் உபவாச ஜெபத்திற்கு செல்கிறேன் என்று சொல்லிவிட்டு வந்தேன். அன்று காலையில் வந்தவுடன் கலா அக்கா என்னைப் பார்த்து நீங்க நினைத்து வந்த காரியத்தை தேவன் வாய்க்க செய்வார் என்றார்கள். ஜெப நேரத்தில் சொந்த வீடு இல்லாதவர்களுக்கு தேவன் சொந்த வீட்டை தருகிறார் என்று சொன்ன அந்த வார்த்தையை பிடித்து விசுவாசத்தோடு ஜெபித்துவிட்டு சென்றேன். வீட்டிலும் போய் இந்த காரியத்திற்காக ஜெபித்து விட்டு, வீட்டு ஓனரிடம் பேசினேன், தேவன் அவர்கள் உள்ளத்தில் கிரியை செய்து அந்த வீட்டை எங்களுக்கு கொடுக்க வைத்தார். அந்த வீட்டில் பராமரிப்பு வேலைகளை செய்து விட்டு தற்போது அந்த வீட்டில் குடியிருக்கச் செய்த தேவாதி தேவனுக்கு கோடான கோடி நன்றி

## சகோதரர். ஜோசப் - மதுரை

தமிழ்நாடு பாலிடெக்னிக்கில் படிப்பிற்காக சேர முயற்சித்த போது முதலில் என்னை நிராகரித்து விட்டார்கள். சோர்ந்து போன நிலையில் 20 வருடங்களாக எங்கள் வீட்டிற்கு வந்த இயேசுவை தினம் பார்க்கிறேன் பத்திரிக்கையை நான் ஒருநாள் கூட வாசித்தது கிடையாது, அன்று அந்த பத்திரிக்கையை வாசித்தேன் அதில் உள்ள தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு எனக்காக ஜெபிக்க கேட்டேன் சகோதரி அவர்கள் ஜெபித்துவிட்டு நீங்கள் போங்கள் உங்களுக்கு சீட் கிடைக்கும் என்றார்கள். அதே போல எனக்கு சீட் கிடைத்தது. இந்த படிப்பை நீங்கள் படிக்க முடியாது கணிதம் பாடம் மிகவும் கஷ்டம் என்று என்னைப் பயமுறுத்தினார்கள், ஆனால் தேவன் எனக்கு விசேஷித்த ஞானத்தை தந்து முதல் தரமாக படித்து முடிக்கவும், நல்ல வேலையில் சேரவும் கிருபை செய்தார், எனக்கு மாத்திரமல்ல என் பிள்ளைகளும் இதே கணித பாடத்தில் முதல் தரத்தில் வெற்றி பெற்று வாழ்க்கையில் முன்னேற தேவன் அநுக்கிரகம் செய்தார். ஒரு சொந்த வீட்டைக் குறித்து யோசித்து, ஓட்டு வீடாவது கட்ட வேண்டும் என்று முயற்சி எடுத்த போது கையில் எந்த பணமும் இல்லாத சூழ்நிலையில் தொலைபேசியில் தொடர்பு கொண்டு சொந்த வீட்டிற்காக ஜெபிக்க கேட்டேன். அப்பொழுதும் தேவன் சொந்த வீட்டைக் கட்ட உதவி செய்வார், தேவைகளை சந்திப்பார் என்று சொல்லி ஜெபித்தார்கள். தேவன் அற்புதமாய் உதவிகள் கிடைத்து வீட்டை கட்டவும் தற்போது அதில் குடியிருக்கவும் கிருபை செய்தார். அவருக்கே எல்லா மகிமையும், கனமும், துதியும் உண்டாவதாக.



# இயேசு வாழ்கிறார் ஊழியத்தோடு இணைந்து சுவிசேஷ ஒளியை பரவ செய்யுங்கள்

தேவன், தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது ஊழியத்தில் பங்கு பெறவேண்டுமென்று விரும்புகிறார்.அவரது நோக்கத்தை நிறைவேற்ற அவர் தமது பிள்ளைகளை பயன்படுத்துகிறார். நாம் வெறும் பார்வையாளராயிருப்பதை அவர் விரும்பாமல், அவரது ஊழியத்தின் பங்காளராக மாறுவதையே அவர் விரும்புகிறார்! நாம் கரையில் நிற்பதை விரும்பாமல் களத்தில் இறங்குவதையே அவர் விரும்புகிறார். அறிவிக்கப்படாத மக்களைச் சந்தித்து, சுவிசேஷத்தை கூறி, உலகை சுவிசேஷமயமாக்குகிற அந்த மகிமையான ஊழியத்தில் தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும் என அவர் விரும்புகிறார்!

விளையச் செய்கிறவர் தேவனாக இருந்தாலும், விதைக்கிற வேலையையும், நீர்ப்பாய்ச்சுகிற வேலையையும் அவர் நமது கரங்களில் ஒப்படைத்திருக்கிறார்(1கொரிந்தியர்3:7). இக்கடைசி காலத்தில், தமது சித்தத்தை நிறைவேற்றுகிற பணியில் ஈடுபடவேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்.

வாருங்கள்! இக்கடைசி கால எழுப்புதல் சுவிசேஷ பணியில் இணைந்து அவரது நோக்கத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தின் பங்காளர்களாக மாறுவோமாக!

## 1) BANK TRANSFER

| | | | |
|---|---|---|---|
| A/C NAME | : JESUS LIVES TRUST | A/C NAME | : L.VINCENT RAJ |
| BRANCH | : KOCHADAI MADURAI | BRANCH | : MADURAI |
| BANK NAME | : UNION BANK OF INDIA | BANK NAME | : AXIS BANK |
| A/C.NO | : 493902010001022 | A/C.NO | : 109010100247030 |
| IFSC CODE | : UBIN0549398 | IFSC CODE | : UTIB0001765 |

## 2) இணையதளம்(WEBSITE)

WWW.JESUSLIVES.IN

ஸ்கேன் செய்யுங்கள்

## 3) காசோலை(CHEQUE)

JESUS LIVES TRUST OR L.VINCENT RAJ

## 4) GOOGLE PAY

: GPAY(GOOGLE PAY)TO , 944 300 9333 ,7598359316

## 5) மணியார்டர்(E.M.O) :

இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் 54 ஏ.ஐ.பி.இ.ஏ நகர்,
ஏ - காலனி பரவை ,மதுரை - 625 402

நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கென்று வங்கிக் கணக்கு மூலமாகவோ, இணையதளம் மூலமாகவோ, அல்லது GOOGLE PAY மூலமாகவோ அனுப்பலாம். காணிக்கை அனுப்பியபின் அதைக் குறித்த விபரத்தை 944 28 00 449 என்கிற இந்த எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு WHATSAPP மூலமாகவோ, accounts@jesuslives.in மூலமாகவோ எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

இயேசு வாழ்கிறார் மீடியா துறைக்கு

# வேலைக்கு ஆட்கள் தேவை

இடம்
மதுரை
சென்னை
திண்டுக்கல்

## Available Positions :

#On Site
**MANAGER - MEDIA OPERATIONS**
Should take care of the entire media operations with vast knowledge in media and digital media with latest technology implementation. Should be Expert in Team handling and the projects.

#Hybrid
**GRAPHIC DESIGNER**
Should have vast knowedgle in Corel Draw,Adobe in design and illustrator. Should have the idea of print media and good work skill on digital platform desgin work as per the platforms

#Hybrid
**CONTENT WRITER**
Should have a biblical knoweldge to write the content both in print media as well as in the Digital Platfoms. Excellent wrtining and communicating skill needed.

## Available Positions :

#On Site
**PROGRAM PRODUCER / DIRECTOR**
Planning and creating new program as per the Inputs and need to have a vast knowledge in creating content from production to broadcasting . Knowledge in Target Audience is a must.

#Hybrid
**VIDEO EDITOR**
Should have vast knowedgle in Premire Pro, Davinci Resolve and FCP X. With creative Edit Skill using the lastest Desinging skill as per the broadcast Standard

#On Site
**SOUND ENGINEEER**
Should have a work experience in Live sound Reinforcment and should handle the Aduio Studio in addtion the Live Broadcasting in realtime.

## Available Positions :

#Hybrid
**MOTION GRAPHICS DESIGNER**
Should have vast knowedgle in After effects, Premiere pro and photoshop with good creative skill. Using the realtime graphics and virtual studio idea will be a plus.

#On Site
**CAMERAMAN**
Should Operate the camera with lighting and audio knowledge.Ready to learn and implement the latest technology

#On Site
**PHOTOGRAPHER**
Able to handle the DSLR and to work on the lightroom. Good Knowdelge with Creative Skill. Four Wheel Driving Experi-ence Needed.

Christian Candidates Having a Zeal to Work in a Christian Organisation can APPLY

**இப்பொழுது விண்ணப்பியுங்கள்**

https://jesuslives.in/careers/
OR
Email : connect@dprince.in
OR
Whatsapp : +91 7825 04 7825
OR
Whatsapp : +91 9498 00 0449

* Any UG/PG Candidates with respective Skill
* Bsc Visual Commuication or Any Media Studies or Experience in the respective Field.
* Experienced Staffs will be given Good Remuneration.
* Food And Accomodation will be provided.
* Male & Female can Apply.
* Fresher are welcomed whereas will undergo 3 months training without stipend.

நடப்பு செய்திகள்



# குளிர்காலத்தில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உதவும் பானங்கள்!

இயற்கையான பல பொருட்கள் மற்றும் மூலிகை இலைகளில் நோய் எதிர்ப்பு சக்தி நிறைந்து உள்ளது. அவற்றை நீர் விட்டு நன்கு கொதிக்க விட்டு வடிகட்டி பருக உடலை ஆரோக்கியமாக வைக்கலாம். நோய்க்கிருமிகள் நம்மை தாக்காமல் பாதுகாத்துக் கொள்ளலாம்.

1. லவங்கப்பட்டை பெரிய துண்டு ஒன்று, கிராம்பு ஐந்து, ஒரு ஸ்பூன் மிளகு மூன்றையும் எடுத்து வெறும் வாணலியில் சூடு வர வறுத்து மிக்ஸியில் பொடிக்கவும். இரண்டு கப் நீரில் ஒரு ஸ்பூன் அளவு இந்தப் பொடியை போட்டு நன்கு கொதிக்க விட்டு இறக்கி வடிகட்டி அதனுடன் சிறிது தேன் கலந்து பருகலாம்.

2. ஒரு கப் பாலில் அரை ஸ்பூன் மஞ்சள் தூள், அரை ஸ்பூன் மிளகுத்தூள் கலந்து நன்கு சுட வைத்து வடிகட்டி சிறிது கல்கண்டு கலந்து பருக சுவையுடன் நோய் எதிர்ப்பு சக்தியும் அதிகரிக்கும்.

3. துளசி இலைகள் ஒரு கைப்பிடி, மஞ்சள் தூள் ஒரு ஸ்பூன், மிளகு தூள் அரை ஸ்பூன் மூன்றையும் வெறும் வாணலியில் வதக்கி ஒரு கப் தண்ணீர் விட்டு கொதிக்க விட்டு வடிகட்டிப் பருக சளி, வறட்டு இருமல் குணமாகும்.

4. வாணலியில் ஒரு பெரிய துண்டு இஞ்சியை தோல் நீக்கி தட்டி போட்டு, மஞ்சள் பொடி ஒரு ஸ்பூன், தனியா தூள் ஒரு ஸ்பூன் சேர்த்து இரண்டு கப் தண்ணீர் விட்டு கொதித்ததும் வடிகட்டி ஒரு ஸ்பூன் அளவு எலுமிச்சை சாறு, பனங்கற்கண்டு சிறிது கலந்து பருக, இந்த பானம் நம் உடலை உஷ்ணமாக வைத்துக் கொள்வதால் குளிர் மற்றும் மழைக்காலத்தில் எளிதில் சளி பிடிக்காது.

5. உலர்ந்த திராட்சையை பத்து எடுத்து தண்ணீரில் ஊற போட்டு கையால் கசக்கி வைத்துக் கொள்ளவும். வாணலியில் சுக்கு பொடி ஒரு ஸ்பூன், மிளகு பொடி ஒரு ஸ்பூன், வெல்லம் ஒரு துண்டு, கசக்கி வைத்துள்ள திராட்சை சாறுடன் சேர்த்து இரண்டு கப் தண்ணீர் விட்டு அடுப்பில் வைத்து நன்கு கொதித்ததும் வடிகட்டி பருக தொண்டைக்கட்டு, இருமல், அஜீரணம், மூக்கில் நீர் ஒழுகுதல், தொண்டை கமறல் போன்றவை குணமாகும்.

6. புதினா இலைகள் ஒரு கைப்பிடி, இஞ்சி துண்டு 1, மிளகு ஆகியவற்றை மிக்ஸியில் அடித்து தண்ணீர் விட்டு அடுப்பில் வைத்து கொதிக்க விடவும். இதனை வடிகட்டி ஒரு துண்டு வெல்லம், சிறிது எலுமிச்சை சாறு கலந்து பருக உடலுக்கு புத்துணர்ச்சி தருவதுடன், தெம்பாகவும் இருக்கும்.

7. பட்டை ஒரு துண்டு, கிராம்பு 4, வரளி மஞ்சள் ஒரு துண்டு (தட்டி சேர்க்கவும்), மிளகு ஒரு ஸ்பூன், ஏலக்காய் 2, தனியா ஒரு ஸ்பூன் ஆகியவற்றை வெறும் வாணலியில் சூடு வர வறுத்து மிக்ஸியில் பொடிக்கவும். இரண்டு கப் நீர் விட்டு ஒரு ஸ்பூன் பொடித்த பொடியை போட்டு கொதிக்க விட்டு வடிகட்டி நாட்டு சர்க்கரை அல்லது வெல்லம் கலந்து பருக தலைவலி, சுவாசப் பிரச்னைகள், சளி, இருமல் போன்றவை ஒழிவிடும்.

8. பாலில் பிஸ்தா, பாதாம், ஏலக்காய் ஆகியவற்றை வறுத்து பொடித்து சேர்த்து கொதிக்க விட்டு பனங்கற்கண்டு கலந்து பருக நல்ல தூக்கம் வருவதுடன் உடலும் ஆரோக்கியமாக இருக்கும்.


நம்பிக்கையின் இரவு
NIGHT OF HOPE
LIVE
நேரலை ஜெபம்
புதிய மாத ஆசீர்வாத வாக்குத்தத்த ஜெபம்
ஜனவரி
31
இரவு 10.30 மணி
முதல் 12.30
மணி வரை
உங்கள் ஜெப விண்ணப்பங்களை அனுப்புங்கள்.
உங்களுக்காக ஜெபம் ஏறெடுக்கப்படும்
அனுப்ப வேண்டிய எண்
944 28 00 449
நமது இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்
அனைத்து சமூக ஊடகங்கள் மற்றும் இணையதளத்திலும் ஒளிபரப்பாகிறது


அன்றன்றுள்ள அப்பம்
11th திருப்பத்தூர்
பரிசுத்த உபவாச முகாம்
பிப்ரவரி
1, 2, 3
வியாழன் வெள்ளி சனி
தொடர்புக்கு - 9884908777, 9962648777
இடம்
அன்றன்றுள்ள அப்பம் ஜெப மண்டபம்
கிறிஸ்துகுல ஆசிரமம்
திருப்பத்தூர் மாவட்டம்



செம்பட்டியில்
புத்தாண்டு வாக்குத்தத்த
ஆசீர்வாதக்கூட்டம்
2024
ஜனவரி
01
மதியம் 3 மணி
முதல் மாலை 6 வரை
Evg.L.Vincentraj
Evg.Kalavincentraj
இடம்
வானத்தின் வாசல் எழுப்புதல் ஜெப மையம்
செம்பட்டி, திண்டுக்கல்.
தொடர்புக்கு- 9498000449, 94428 00449